ஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

15 12 2024 6 30

ஞாயிற்றுக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாவோயிஸ்ட்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணைய முன்வருமாறு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

2. முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் நதிநீர் இணைப்புத் திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டும் என அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

4. அரசியல் சாசன சிற்பி அம்பேத்கருக்கு பிஜேபி ஆட்சியில்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மாவோயிஸ்ட்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணைய முன்வருமாறு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

ராய்ப்பூரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சத்தீஸ்கட் மாநில காவல்துறையினருக்கு குடியரசுத்தலைவரின் கொடியை வழங்கி அவர் உரையாற்றினார்.

2026ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் சத்தீஸ்கட் மாநிலத்தை நக்சலைட் தீவிரவாதிகள் இல்லாத மாநிலமாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக அவர் கூறினார்.

நக்சலைட்டுகள் சரணடைவதற்கு உகந்த கொள்கைகளை மாநில அரசு வகுத்திருப்பதுடன், அவர்களுக்கான மறுவாழ்வு தொகுப்புத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின்போது ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைந்த நக்சலைட்கள், காவல்துறை பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமைகளை மாநில அரசு ஒருபோதும் விட்டுக்கொடுக்காது என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி கூறியுள்ளார்.

வடகிழக்குப் பருவமழை தொடர்பாக தேனி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், ஃபெஞ்சல் புயல் பாதிப்பின்போது தமிழக அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால்தான் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாக தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை சரிசெய்யவும், விவசாயம் மற்றும் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யவும் நதிநீர் இணைப்புத் திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டும் என அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

சென்னையில் இன்று நடைபெற்ற அக்கட்சியின் செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோதாவரி - காவிரி இணைப்பு, பரம்பிக்குளம் ஆழியாறு, பாண்டியாறு – புன்னம்புழா திட்டங்களை செயல்படுத்த தவறிய திமுக அரசுக்கு அக்கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும், திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்குவதுடன், தமிழகத்திற்கான நிதிப் பகிர்வினை மத்திய அரசு பாரபட்சமின்றி வழங்க வேண்டும், சாதிவாரி கணக்கெடுப்பை மாநில அரசே மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுக்குழு தீர்மானங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

எதிர்கால உலகை இந்தியாவின் அறிவுத்திறன் வழிநடத்தும் என அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுவின் தலைவர் பேராசிரியர் திரு. டி.ஜி. சீதாராம்

சென்னையில் உள்ள தேசிய தொழில்நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கல்விக் கழகத்தின் வைர விழாவில் அவர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்தியாவின் பண்டைய ஞானத்திற்கும், நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கும் இடையே ஆழமான தொடர்பு இருப்பதாக அவர் கூறினார்.

செயற்கை தொழில்நுட்பம் உள்ளிட்ட வளர்ந்து வரும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

விழாவில் வைரவிழா சிறப்பு மலரையும் அவர் வெளியிட்டார்.

என்.ஐ.டி.டி.ஆர். அமைப்பின் இயக்குநர் திருமதி உஷா நடேசன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

அரசியல் சாசன சிற்பி அம்பேத்கருக்கு பாஜக ஆட்சியில்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சியில் அம்பத்கருக்கு அலிப்பூர் சாலையில் நினைவிடம் அமைக்க முடிவு செய்யப்பட்டதாக கூறியுள்ளார்.

அதன் பின்னர் வந்த காங்கிரஸ் ஆட்சி இதை செயல்படுத்தாத நிலையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசுதான் அம்பேத்கர் மீது கொண்டுள்ள மரியாதையால் அவருக்கு நினைவிடம் அமைத்ததாக மக்களவையில் பிரதமர் திரு. மோடி பேசியிருப்பதை திரு. அண்ணாமலை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

சென்னையில் நேற்று காலமான முன்னாள் மத்திய அமைச்சரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் உடல் இன்று அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

முகலிவாக்கம் மின்மயானத்தில் காவல்துறையினரின் 21 குண்டுகள் முழங்க அவருக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழக அரசின் சார்பில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு இளங்கோவன் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் தேசிய கால்நடை நோய் கட்டுப்படுத்தல் திட்டத்தின்கீழ் 2 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது.

இதற்கான முகாம் நாளை தொடங்குவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தென்மேற்கு அந்தமான் கடல் மற்றும் அதனையொட்டிய தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி மேலும் வலுப்பெற்று மேற்கு-வடமேற்கு திசையில்

தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாளை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுநாள் கடலோர தமிழகத்தின் அனேக இடங்களிலும், உள்தமிழகத்தின் ஒருசில இடங்களிலும் மிதமான மழையும், டெல்டா மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும் பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் அதிக அளவாக திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில் 13 சென்டி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருச்சி கருமண்டபம் பகுதியில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு நேரில் பார்வையிட்டு தண்ணீரை அகற்றும் பணியை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

--------------

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தொகுதிக்குட்பட்ட சென்னம்பட்டி அணைக்கட்டில் சமீபத்திய மழை காரணமாக ஏற்பட்ட சேதத்தை சீரமைக்கும் பணிகளை மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இன்று ஆய்வு செய்தார்.

--------------

கொடைக்கானல் மன்னவனூர் அருகேயுள்ள புலிபிடித்தான்கானல் நீர்த்தேக்கத்தின் கரை உடைந்ததால் கீழானவயல் கிராமத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

--------------

கள்ளக்குறிச்சியில் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கான இடத்தை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தண்டபானி இன்று ஆய்வு செய்தார்.

--------------

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் கார்த்திகை தீபத் திருவிழாவின் ஒரு பகுதியாக தெப்ப உற்சவம் நடைபெற்றது.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் பவர் டில்லர் மற்றும் களையெடுக்கும் சாதனங்கள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

--------------

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் காவிரிக்கரையில் கார்த்திகை கடை ஞாயிறு தீர்த்தவாரி நிகழ்ச்சி வெகு விமரிசையாக நடைபெற்றது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தயிது.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 67 ரன் மட்டுமே எடுத்தது.

பின்னர் களமிறங்கிய இந்திய அணி 7 புள்ளி 5 ஓவரிலேயே ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 68 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

மற்றொரு போட்டியில் இலங்கை அணி – மலேசியா அணியை 94 ரன் வித்தியாசத்தில் வென்றது.

-------------

பிரிஸ்பனில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர இறுதியில், ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 405 ரன் எடுத்துள்ளது.

அந்த அணியின் ஸ்டீவன் ஸ்மித் மற்றும் ட்ராவிஸ் ஹெட் ஆகியோர் சதமடித்தனர்.

-------------

ஷோலாப்பூர் மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Shrivalli Rashmikaa Bhamitipaty** பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர், தாய்லாந்தின் **Bunyawi Thamchaiwat**-ஐ 7-5, 6-3 என்ற செட் கணக்கில் வென்றார்.

----------------

காசநோய் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் புதுதில்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில், திரு. அனுராக் தாக்கூர் தலைமையிலான மக்களவைத் தலைவர் லெவன் அணி வெற்றி பெற்றது.

இதற்கான பரிசளிப்பு விழாவில் மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**<<<<The End>>>>**